Tamil Nadu Civil Judge (Mains) 2019

Translation Paper · compulsory paper

Duration : 3 Hours · Max. Marks : 100 · HC JN I – 2020

மொழிப்பெயர்ப்பு தாள் (தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

நேரம் : 3 மணி · மொத்த மதிப்பெண்கள் : 100

General Instructions to candidates :

தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question paper i.e. the court's name, place, case numbers and names of parties are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of solving the questions.

ii) இந்த தாளில் மொத்தம் நான்கு பிரிவுகள் முறையே அ, ஆ, இ, ஈ உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா இரண்டு வினாக்கள் என மொத்தம் எட்டு வினாக்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் விடை அளிக்க வேண்டும்.

The paper contains Four Sections A, B, C and D. Each section contains two questions in total 8 questions and all the questions should be answered.

iii) அ பிரிவில் உள்ள ஒவ்வொரு வினாவும் தலா 20 மதிப்பெண்கள் கொண்டுள்ளது. ஆ, இ மற்றும் ஈ பிரிவுகளில் உள்ள ஒவ்வொரு வினாவும் தலா 10 மதிப்பெண்கள் கொண்டுள்ளது.

Questions in Section A carry 20 marks each. Questions in Sections B, C and D carry 10 marks each.

SECTION A — (2 × 20 = 40)

பிரிவு அ — (2 × 20 = 40)

1. [20 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

"Despite various measures to improve the socio-economic conditions of the Scheduled Castes and the Scheduled Tribes, they remain vulnerable. They are denied number of civil rights. They are subjected to various offences, indignities, humiliations and harassment. They have, in several brutal incidents, been deprived of their life and property. Serious crimes are committed against them for various historical, social and economic reasons".

Owing to awareness created amongst the Scheduled Castes and Scheduled Tribes through spread of education, etc., they are trying to assert their rights and this is not being taken very kindly by the others. When they assert their rights and resist practices of untouchability against them or demand statutory minimum wages or refuse to do any bonded and forced labour, the vested interests try to cow them down and terrorise them. When the Scheduled Castes and the Scheduled Tribes try to preserve their self-respect or honour of their women, they become irritants for the dominant and the mighty. Occupation and cultivation of even the Government allotted land by the Scheduled Castes and the scheduled Tribes is resented and more often these people become victims of attacks by vested

interests. Of late, there has been an increase in the disturbing trend of commission of certain atrocities like making the Scheduled Caste persons eat inedible substances like human excreta, attacks on, mass killings of helpless Scheduled Castes/Scheduled Tribes, rape of women belonging to Scheduled Castes and the Scheduled Tribes. Under the circumstances, the existing laws like the protection of Civil Rights Act, 1955 and the normal provisions of the Indian Penal Code have been found to be inadequate to check these crimes. A special Legislation to check and deter crimes against them committed by non-Scheduled Castes and non-Scheduled Tribes has, therefore, become necessary.

2. [20 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into English :

இராஜசேகரன் என்பவர் ஒரே சொத்தான், அதாவது 16 அடி அகலமுடைய துண்டுநிலத்தின் மீது வெவ்வேறு காலங்களில் உரிமைகளை ஏற்படுத்தியுள்ளார், அத்தகைய உரிமைகள் அனைத்தும் ஒருசேர முழு அளவிற்கு இருந்து வருதலோ அல்லது செயலுறுத்தப்படுதலோ இயலாதிருக்கிறவிடத்து, பின்னர், ஏற்படுத்தப்பட்ட ஒவ்வோர் உரிமையும் முந்தைய ஏற்படுத்தப்பட்ட உரிமைகளுக்கு உட்பட்டிருக்கும் என்று மேற்படி வகையம் கருத்துரைக்கிறது, முந்தைய உரிமைமாற்றம் பெறுநரை கட்டுப்படுத்துகிற சிறப்பு ஒப்பந்தமோ அல்லது ஒதுக்கீடோ ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது விதிவிலக்கானதாகும், 1988ஆம் ஆண்டு மே திங்கள் 31ம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தில் வாதிக்கு அளிக்கப்பட்ட தனிப்பட்ட உரிமையானது, முந்தைய உரிமைமாற்றம் பெறுநரான 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தும் சிறப்பு ஒப்பந்தமோ அல்லது ஒதுக்கீடோ கொண்டிருக்கும், அக்காலம்வரையில் அது சட்டப்பூர்வமானதாகாது என்று பொருள்படும். 2 ம் பிரதிவாதிக்கு நடைபாதை உரிமையளித்து 1976ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், நிலம் விற்றவர் 1988ம் ஆண்டு மே திங்கள் 1ம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணம் மூலம் வாதிக்கு தனிப்பட்ட உரிமையை அளித்திருக்கக்கூடாது.

தேவைக்கான வசதியுரிமை முடிவுக்கு வந்துவிட்டால், வசதியுரிமை அழிந்துவிடுகிறது என்ற வாதமானது தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தத்தக்கதல்ல. இருபிரதிவாதிகளும் இறந்தபின்னர், இரு பிரதிவாதிகளுக்குள்ள உரிமை, உரிமை மூலம் மற்றும் பாத்தியதை, தற்போது ஒரு நபரிடமே இணைந்துவிடுகிறது என்ற பொருண்மையின் அடிப்படையிலானதே இவ்வாதமாகும். 1976ம் ஆண்டின் உரிமைமூல ஆவணத்திலிருந்தே தரப்பினர்களின் உரிமைகள் எழுகின்றன. மேலும், வழக்கு தாக்கல் செய்த நாளன்று உள்ளவாறான தரப்பினர்களின் உரிமைகளின்பேரிலேயே அவற்றை சட்டப்படி தீர்மானிக்க வேண்டியுள்ளது. ஒரே நபரிடம் சொத்து மரபுரிமையாக சென்றடைவதற்கான பிந்திய நிகழ்வுகள், 2ம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதிக்கு நிலத்தின் ஒரு பகுதியை கொடையாக அளித்துள்ளதாலோ அல்லது இரு பிரதிவாதிகளில் இறப்பிற்குப்பிறகு, பொதுவான சட்ட நடவடிக்கைகள் மூலம் சொத்தை மரபுரிமையாகப் பெறுவதாலோ, அவர்களது நிலத்தின் பக்கத்திலுள்ள நடைபாதையைப் பயன்படுத்தும் பிரதிவாதிகளின் உரிமையைப் பறித்துவிடாது.

SECTION B — (2 × 10 = 20)

பிரிவு ஆ — (2 × 10 = 20)

3. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

Now these presents Witnesseth that I Mr A do hereby nominate, constitute and appoint B to be my true and lawful attorney to do, execute and perform all or any of the following acts, deeds, matters and things namely:

To negotiate and enter into agreements with existing tenants, to arrange for the alternative accommodation if necessary and to assure them to give similar accommodation in the multistoreyed building when constructed on such terms and conditions as the attorney may think appropriate and if necessary to take legal proceedings for eviction of tenants and to engage lawyers for that purpose, to sign vakalatnama, all pleadings, affidavits and petitions necessary in that connection. To ask, receive and realise from all occupiers or purchasers of flats, charges, expenses, rates, cesses and other sums due or that might become due and payable by them and on non payment to take appropriate steps for realisation thereof.

4. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into English :

சேலம் தாலுகா சோமம்பட்டி கிராம முன்சிப் முன்னிலையில், 24.05.2016-ந் தேதி இரவு சுமார் 8 மணிக்கு சோமம்பட்டி கிராமத்தில் இருக்கும் கஞ்சமலை உடையார் மகன் பச்ச முத்து உடையார் கொடுத்த வாக்குமூலம் :- இன்று 24.05.2016-ந் தேதி சனிக்கிழமை சாய்ந்திரம் சுமார் 5½ மணியளவில் நான் எங்கள் காட்டுக் கொட்டகையின் எதிரில் கட்டில் போட்டு உட்கார்ந்திருந்தேன்.

என் பேர பிள்ளைகள் ஜோதி, சுமதி, வீரமுத்து, அருணாசலம் ஆகியோர்களும் மற்றும் என் மகன் ராஜ மாணிக்கத்தின் மகளும் என் பேத்தியுமான கலைச்செல்வியும் வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். என் மகள் செல்லம்மாள் ஊத்தங் கரையில் நடக்க இருக்கும் சின்னகண்ணு மகள் திருமணத்திற்கு போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனார். கொஞ்ச நேரத்தில் ஆறுமுக உடையார் வீட்டு பக்கத்தில் இருந்து என் மகள் அலறும் சத்தமும், அதே சமயத்தில் என் பேத்தி ஜோதி அய்யோ அம்மாவை அடிக்கிறாங்களே என்று கூச்சல் இட்ட சத்தமும் கேட்டது. ஆறுமுக உடையார் வீட்டு பக்கமாக என் பேர குழந்தைகள் எல்லோரும் ஓடினார்கள். என்ன என்று பார்க்க நானும் ஓடினேன். ஆறுமுக உடையார் குடிசைக்கு கிழக்கு பக்கம் மூலையில் என் மகள் செல்லம்மாளை கீழே தள்ளி ஆறுமுக உடையார் மகன் கோவிந்தன் தலைப் பக்கம் அமுக்கி பிடித்துக் கொண்டிருந்தான். நடராஜன் என் மகளின் நெஞ்சின் மேல் ஒரு காலை வைத்து அமுக்கி பிடித்துக் கொண்டிருந்தான். ஆறுமுக உடையார் மனைவி வள்ளியம்மாள் என் மகளின் இரண்டு கால்களையும் அமுக்கி பிடித்துக் கொண்டிருந்தார். ஆறுமுக உடையார் ஒரு கையில் தடி ஒன்றை வைத்திருந்தார். நின்றபடியே ஒரு காலை என் மகளின் காலின் மேல் வைத்து அமுக்கி கொண்டு இருந்தார். ஆறுமுக உடையாரின் மூத்த மகன் பச்சமுத்து ஒரு கொடுவா கத்தியால் என் மகளின் குரல்வளையை அறுத்தான். நான் அய்யோ இது நியாயமா என்று கேட்டுக்கொண்டே தடுக்க போனேன். ஆறுமுக உடையார் என்னிடம் ஓடி வந்து என்னடா நியாயம் பேசுகிறாய் என்று சொல்லி கொண்டே அவன் கையில் இருந்த தடியால் என்னுடைய இடது பக்க தொடை மீதும், வலது பக்க மேல் கையிலும், ஓங்கி அடித்தார். நான் கீழே விழுந்து விட்டேன். அவர்கள் ஐவரும் ராமலிங்க உடையார் வீட்டு மார்க்கமாக ஓடினார்கள். என் மகள் செல்லம்மா சிறிது நேரத்தில் இறந்துவிட்டாள். அதேசமயத்தில், தெய்வானையும் என் மகள் வெட்டுப்பட்டு கிடந்த இடத்திற்கு ஓடிவந்தார். அவர் எதிரிகள் ஓடியதை பார்த்தார். இப்போது என் மகளின் பிரேதம் அதே இடத்தில் இருக்கிறது. அதை பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SECTION C — (2 × 10 = 20)

பிரிவு இ — (2 × 10 = 20)

5. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

On 07-06-1968 at about 10 a.m. I was in the company of A.R. Constables that reached the Factory Premises in Porur on a message received from the control Room during the earlier part of that day. When we reached the factory, I found about 300 workers standing outside the gates of the factory. On reaching the factory, we were stationed at the gates of the factory. At the time, the Security Officer of the Factory came in a van from inside the factory towards the gates. He went out and returned to the factory with workers in the van. He might have returned within 10 minutes. The van entered the gates and went inside. When the van was parked inside, about 5 workers got down from the van and entered the factory buildings. At that time, the workers standing outside the gates shouted that the rowdies must be sent out and that, or else there would be violence. They were referring to the workers who went inside, as rowdies. We prevented those persons from entering the factory premises. Pushing us away, those persons entered through the gates into the building of the factory. After so entering, those persons sat down in the open space surrounding the factory building. After sitting down, they shouted that they would enter the building if the workers taken inside were not sent out. Several of those persons attempted to enter the building through several ways. On this, we policemen stood surrounding these slogan shouting persons with a view to prevent them from entering the buildings. On this, some persons in that crowd began to pelt stones at us. A stone fell on my left knee. On being injured, I came to the Security Officer's room. Later, I was sent to General Hospital, Madras, for treatment. Since I was in a dazzed condition, I cannot say how many policemen received injuries on that date.

6. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into English :

திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் எந்த வேலையிலும் இல்லை. முதல் குழந்தை பிறந்தபின்னர் அரசாங்க ஆசிரியர் வேலை கிடைத்தது என்றால் சரிதான். குளத்தூரில் இருந்து எதிர்மனுதாரர் வேலைபார்க்கும் இடத்திற்கு கைக்குழந்தையுடன் செல்ல சிரமம் ஏற்படும் என்பதால் நான்தான் சென்னைக்கு மாறுதல் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். சென்னை முகப்பேரில் மாறுதல் கிடைத்ததால், அருகிலேயே வீடு இருந்தால் நல்லது என்று நினைத்து, வீடு பார்த்து அங்கேயே குடும்பம் நடத்தினோம். எதிர்மனுதாரர் வேலைக்கு செல்வதால் அவருக்கு உதவியாக அவருடைய தாயாரும் உடன் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு வந்து என்னுடைய விருப்பத்தின் பேரில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். நான் ஐசிஎப்பில் வேலை பார்க்கிறேன். இரண்டாவது குழந்தை பிறந்தபோது எதிர்மனுதாரரின் குடும்பத்தார் யாரும் உடனில்லை. அந்த சமயத்தில் இரு குடும்பத்தாரின் பெற்றோர்களின் தலையீடு இல்லாமல்தான் நாங்கள் இருந்தோம் என்றால் சரிதான். இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர் குழந்தையை பார்த்துக்கொள்வதற்காக தான் எதிர்மனுதாரரின் தாயார் வந்து உடனிருந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை விட எதிர்மனுதாரரின் தாயார் மீது தான் என்னுடைய குற்றச்சாட்டுகள் அதிகம் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரை விட்டு வெளியேறிய பின்னர்

எதிர்மனுதாரர் பலமுறை அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை வருமாறு அழைத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு எங்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு 2007ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நான் முகப்பேருக்கு வந்து நாங்கள் இருவரும் ஒன்றாக குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். பின்னர் 2007ம் ஆண்டு நவம்பர் மாதம் எதிர்மனுதாரரையும் குழந்தையையும் விட்டுவிட்டு சென்று விட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் அவர் சுற்றத்தாரும் எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்து வாழ அழைத்தபோது நாங்கள் கதவை திறக்காமல் காவல் நிலையத்தில் புகார் கொடுப்போம் என்று மிரட்டினோம் என்றால் சரியல்ல. ஆனால் இது குடும்ப பிரச்சனை என்பதால் எல்லோரும் போங்கள் இல்லை என்றால் காவல் நிலையம் செல்வோம் என்று சொன்னேன். இன்று நீதிமன்றத்தில் குழந்தைகளை பார்ப்பதை தவிர வழக்கு தொடர்ந்த பின்னர் இன்று வரை குழந்தைகளை பார்க்க நான் முயற்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் நான் அப்படி வாழ தயாராக இல்லை.

SECTION D — (2 × 10 = 20)

பிரிவு ஈ — (2 × 10 = 20)

7. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into Tamil :

The defendant, who is a neighbour of the plaintiff, is a person of quarrelsome nature and is a miscreant person of the society. The defendant filed a false and fabricated criminal complaint against the plaintiff and his family members on 04.06.2002 alleging that the plaintiff and his aforesaid family members molested the defendant's wife by holding her hair and even tore off her clothes. In the aforesaid complaint, it was also alleged that the plaintiff has relations with goonda elements and is engaged in selling country-made liquor in connivance with local police. Since the aforesaid complaint lodged by the defendant was false, fabricated and frivolous, the concerned police did not take any action thereon. The defendant, thereafter, filed a false criminal complaint No. 40/2002 against the plaintiff and his family members under section 448 354 and 506 of the India Penal Code read with section 156(3) of the Code of Criminal Procedure on 20.06.2002. In the said complaint, vide order dated 08.07.2003, the learned Magistrate issued summons against the plaintiff and his family members. On receipt thereof, the plaintiff and his above named family members appeared before the Court and obtained bail. The first appearance was made by the plaintiff in October, 2003. After giving various opportunities to the defendant herein, the aforesaid complaint was dismissed for nonprosecution vide order dated 06.05.2008 passed by the learned Metropolitan Magistrate. Against the said order, the defendant filed a revision petition No. 546/2008 which was dismissed vide order dated 03.02.2009 passed by the Additional Sessions Judge. Against the same, the defendant filed a Criminal O.P. No. 91/2009 before the Hon'ble High Court of Delhi which was also dismissed vide order dated 09.07.2009. The complaint was a false and frivolous complaint filed by the defendant with malice to ruin the reputation of the plaintiff and his family members. The aforesaid criminal prosecution initiated by the defendant was influenced by ulterior motive and, therefore, the defendant continued to take time to lead evidence and failed to do so despite several opportunities having been given. Though the value of the plaintiff's reputation in the society, which was ruined on account of such malicious prosecution, cannot be quantified, the plaintiff has claimed notional damages to the tune of Rs. 3,00,000/ from the defendant for harassment and loss of reputation.

8. [10 marks]

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

Translate the following into English :

42 வயதான மரணமடைந்தவர் ஒன்றாம் எதிர்மனுதாரரின் கீழ் இயங்கும் அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். மரணமடைந்தவர் தினமும் காலை 6.30 மணிக்கு மதுரையிலிருந்து புறப்பட்டு காலை 11.30 மணிக்கு விழுப்புரம் வரைக்கும்; மீண்டும் மாலை 3 மணிக்கு விழுப்புரத்திலிருந்து புறப்பட்டு இரவு 8 மணிக்கு மதுரை வரைக்கும் பயணிகளை ஏற்றிக்கொண்டு அரசு பேருந்தை ஓட்ட வேண்டும். ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல பயண நேரம் தோராயமாக 5 மணி நேரம் ஆகும். மரணமடைந்தவர் சில நேரங்களில் பணியின் தன்மை காரணமாக ஒரு வாரம் கூட வீட்டிற்கு வரமாட்டார். மரணமடைந்தவர் பேருந்தில் 24 மணி நேரமும் இருக்கவேண்டும் என்பது அவர் செய்து வந்த பணியின் தன்மையாகும். அப்படி செய்யாவிடில் அது பணி அளிப்பவரின் தேவையை நிறைவு செய்யாது. மரணமடைந்தவர் பேருந்தின் மீதிருந்தது நிர்பந்தத்தினாலேயேயன்றி விருப்பத்தினால் அல்ல. மரணமடைந்தவர் 24 மணி நேரமும் பேருந்துடன் இருக்கவேண்டும் என்பதற்காகவே மாதம் ஒன்றிற்கு ரூ.6,000/- ஊதியம் வழங்கப்பட்டது. அவர் 18.07.2010 அன்று பேருந்து நிலையத்தில், தான் ஓட்டுநராக பணிபுரியும் பேருந்தின் கூரையின் மீது உணவு உட்கொண்ட பிறகு இறங்கி வரும்போது எதிர்பாராத வகையில் மரணமடைந்தார். மரணமடைந்தவர் பேருந்து கூரை மீது தனது உணவை உட்கொண்டபிறகு இறங்கி வரும்போது விபத்து நிகழ்ந்ததால் மரணமானது பணியின்போது நிகழ்ந்தது என்று கருதப்படவேண்டும். மரணமடைந்தவர் பணியின் போது அப்பணியின் காரணமாக விபத்திற்குள்ளாகி இறந்தார்.

எதிர் உரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:– மரணமடைந்தவரின் பணியானது இரவு 8 மணிக்கு முடிந்துவிட்டது. அவர் பணிநேரம் முடிந்து 8.30 மணியளவில் பேருந்து மீதிருந்து கீழே விழுந்ததாக கூறப்படுகிறது. ஆகவே அவர் பணியிலிருந்தபோது இறந்ததாக கருதப்பட முடியாது. அவருடைய மரணத்திற்கும் கடமையை நிறைவேற்றலுக்குமிடையே தொடர்பு இல்லை. மரணமடைந்தவர் தன் விருப்பத்தின்பேரில் பேருந்தின் கூரையின்மீது உணவு உட்கொண்டார்.